# DAC மதிப்பாய்வு நியதிகள்

## செயல்திறன்

*(Effectiveness)*

பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் பிரஜைகளுக்கான அதி செயற்திறன் மிக்க உறுப்பினராக இருப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ளீர்களா?

பாராளுமன்ற விவாதங்களின்போது உங்களது தொகுதியை பிரதிநிதித்துவம் செய்து சரியான கேள்விகளை எழுப்புவதன் ஊடாக நாட்டின் அபிவிருத்தியை உச்சமடையச் செய்வதற்கு ஆர்வங் கொண்டுள்ளீர்களா?

அப்படியாயின் பொருளாதார ஒத்துழைப்புக்கான அபிவிருத்தி நிறுவனம்/அபிவிருத்தி உதவிக்கான குழு (OECD/DAC) ஏற்றுக்கொண்ட மதிப்பாய்வு நியதிகள் அடங்கிய இந்த கையேட்டுத் தொடரினை வாசிப்பது பிரயோசனமாகும்.

**மதிப்பாய்வுக்கான ஆசிய பசுபிக் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமையம்**

## அறிமுகம்

பாராளுமன்றத்திற்குள்ள அதிகாரங்களின் ஊடாக மக்களை பிரதிநிதித்துவம் செய்தல், சட்டவாக்கம், அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் போன்ற அபிவிருத்தி செயன்முறையில் முக்கிய பாத்திரம் ஒன்றை வகிக்க முடியும். ஆனாலும் அரசாங்கத்தின் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் வலுவாகவும் சரியாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டதா? என்பதையும், மக்களின் வாழ்க்கையில் அவை விருத்தியை ஏற்படுத்தியதா என்பதையும் எவ்வாறு உறுதி செய்ய முடியும்? அவை சிறந்த கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களா? என்பதை எவ்வாறு உறுதி செய்ய முடியும்?

மதிப்பாய்வின் மூலமான ஆதாரங்களைக் கொண்டு விமர்சன பூர்வமான சிந்தனைகள் ஊடாக திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வடிவமைப்பதில், செயற்படுத்துவதில், கலாசாரம் ஒன்றை வளர்த்தெடுப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகமானது சிறந்த தலைமைத்துவத்துடன் நியாாயமான, நிலைபேறான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதாகவும் அமையும்.

அபிவிருத்தி இடையீடுகள் (Intervention) தொடர்பிலான தெளிவான புரிதலுடன் பாராளுமன்ற விவாதாங்களிலும் துறைசார் குழு அறைக் கலந்துரையாடல்களிலும் சரியான கேள்விகளை முன்வைப்பதன் மூலம் பிரஜைகளுக்கான உச்சப்பயன் கிடைப்பதை உறுதி செய்யலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதங்களின்போது சரியான கேள்விகளை மதிப்பாய்வு ஆதாரங்கள் ஊடாக முன்வைப்பதற்கு அவசியமான அடிப்படைகளை OECD/ DAC மதிப்பாய்வு நியதிகள் வழங்குகின்றன.

## செயல்திறன் (Effectiveness)

இடையீடானது எந்தளவு அடைவினைப் பெற்றுள்ளது? அல்லது எதிர்பார்க்கப்பட்ட அடைவினை நெருங்கியுள்ளது? வேறுபட்ட குழுக்களுக்கு இடையிலான பெறுபேறுகள் வித்தியாசமான அடைவுகளைக் கொடுத்துள்ளதா? உள்ளடங்களாக அதன் நோக்கங்கள், பெறுபேறுகள் அடையப்பட்டுள்ளனவா என்பதனை அளவிடப் பொருத்தமான நியதியாக OECD / DAC செயல்திறன் (Effectiveness) என்பதை வரைவிலக்கணம் செய்கின்றது.

## முக்கிய விதிமுறைகள்

ஒப்பீட்டு ரீதியாக நோக்கங்கள் அல்லது பெறுபேறுகள் எவ்வாறு அடையப்பட்டுள்ளன என்பதை அளவிடுவதற்கு செயல்திறன் (Effectiveness) நியதி அவசியமாகிறது.

மேலும், இடையீடானது ஒட்டுமொத்தமாக அடையப்பட்ட பெறுபேறுகளையும் எதிர்பார்க்கப்பட்ட பொருத்தப்பாடு, தாக்கம், இணைக்கப்பாட்டுத்தன்மை, நிலைபேறான தன்மை ஆகியன எந்தளவுக்கு அடையப்பட்டுள்ளன என்பதையும் அளவீடு செய்வதாகவும் செயல்திறன் (Effectiveness) நியதி அமையும்.

## மதிப்பாய்வு நியதிகள்

**பொருத்தப்பாடு (Relevance)**
இடையீடு சரியானதைச் செய்கிறதா?

**இணைக்கப்பாடு (Coherence)**
இடையீடு எந்தளவுதூரம் இணக்கமாகவுள்ளது?

**செயற்திறன் (Effectiveness)**
இடையீடு அதன் நோக்கங்களை அடைகின்றதா?

**வினைத்திறன் (Efficiency)**
வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன?

**தாக்கம் (Impact)**
இடையீடு எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியது?

**நிலைபேறானதன்மை (Sustainability)**
இறுதிவரையான பயனாற்றுகை அடையப்பெறுகின்றதா?

## மதிப்பாய்வின் செயற்திறன் (Effectiveness) நியதியை பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு பயன்படுத்தலாம்?

பொது மக்களின் நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்படும் பாரிய அபிவிருத்தி இடையீடுகளை (Development Intervention) மேற்பார்வை செய்கின்ற பொறுப்பு பாராளுமனறத்துக்கு உரியது. இடையீடுகள் தொடர்பிலான செயற்திறன் (Effectiveness) குறித்த கேள்விகளை முன்வைப்பதன் மூலம் பிரஜைகளுக்காக கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் உண்மையில் அடையப் பெற்றனவா என்பதை பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிந்து கொள்ள முடியும்.

நிகழ்ச்சித் திட்டமொன்றின் செயல்திறனையும் செய்திறனுக்கான காரணிகளையும் (சாதகமான/பாதகமான) தெரிந்து கொண்டு செயற்திறன் சார்ந்த கேள்விகளை எழுப்புவதன் மூலம், அதனை விருத்தி செய்யும் வகையில் அடுத்தடுத்த கட்டங்களில் மாற்றங்களை செய்யக்கூடிய விதத்தில் மீளவடிவமைக்கக் கூடிய வாய்ப்பினை வழங்குகிறது.

செயற்திறன் சார்ந்த கேள்விகளை எழுப்புவதன் மூலம் மக்களின் பொது நிதியைப் பயன்படுத்தி செய்யப்பட்ட அபிவிருத்தியின் பெறுபேறுகள் எதிர்பார்த்த மட்டத்தை அடைந்துள்ளனவா? என்பதை அறிய முடியும். உதாரணமாக வறுமை ஒழிப்புத் திட்டம் ஒன்றினை மீளாய்வு செய்வதன் ஊடாக, குறைவருமானக் குடும்பங்களில் வருமானம் அதிகரித்துள்ளமை தொடர்பில் ஆதாரங்களைக் காட்டுமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோர முடியும். குறிப்பிட்ட இடையீட்டு காலத்தில் எத்தனைக் குடும்பங்கள் வறுமையில் இருந்து மீண்டு இருக்கின்றன? போன்ற கேள்விகள் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒப்பீட்டு ரீதியாக நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திறனை அறிந்துகொள்ளவும், அவசியமெனில் மாற்று நிகழ்ச்சித் திட்டத்தையோ அல்லது இடையீட்டின் மூலோபாயங்களை மாற்றியமைக்கவோ முடியும்.

செயற்திறன் நியதி சார்ந்து அபிவிருத்தி இடையீடுகளை மதிப்பாய்வு செய்து மதிப்பாய்வு அறிக்கைகளில் சேர்க்கும்போது, பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்புவதற்கு உதவியாக அமைய முடியும். இவ்வாறான விதந்துரைப்புகளைக் காரணங்காட்டியும் மேலும் செயற்திறன் குறித்து தொடர்ந்து கற்றுக்கொள்வதன் ஊடாகவும் நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்த தமது கொள்கையாக்கம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்புவதற்கு உதவியளிப்பதாக அமையும்.

## செயற்திறன் (Effectiveness) உறுதி செய்யும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக்கூடிய கேள்விகள்

அபிவிருத்தி நோக்கிய இடையீடுகள், கொள்கைகள், நிகழ்ச்சித் திடடங்கள் செயற்திறனாக (Effectiveness) உள்ளனவா என பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக் கூடியதாகவும் அவற்றின் ஊடாக குறித்த அபிவிருத்தி நோக்கிய இடையீடுகள், கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றவும் முடியும்.

கேள்விகளாக பின்வருவனவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

**அ:** அபிவிருத்தி இடையீடாக கொள்கை/ நிகழ்ச்சித்திட்டம் ஒப்பீட்டு ரீதியில் குறுங்கால, மத்திம கால, நீண்டகால பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டுள்ளனவா அல்லது பெற்றுக்கொள்வதற்கான சாத்தியபாடுகள்?

**ஆ:** குழுக்களுக்கு இடையே ஒப்புரவு அடிப்படையில் பெறுபேறுகள் அடையப்பட்டுள்ளனவா?

**இ:** ஒட்டுமொத்தமாகவும் குழுக்களிடமும் பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதில் அல்லது பெற்றுக்கொள்ள முடியாது போனதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் எவை?

**ஈ:** நிகழ்ச்சித்திட்ட இடையீடானது செயற்திறன் (Effectiveness) நியதியுடன் எந்தளவு தூரம் இணைக்கப்பட்டுள்ளது?

**உ:** இடையீட்டின் செயற்திறனை (Effectiveness) அடைந்துகொள்வதற்கு உதவியாக இருந்த காரணிகள் அல்லது தடங்கலாக இருந்த காரணிகள் எவை ?

---

*Source: De Silva,S.(2021).Theory of Change For Development Success: Workbook. Colombo, Sri Lanka: Sri Lanka Evaluation Association*

## செயற்திறன் (Effectiveness) தொடர்பிலான வேறு வள மூலங்கள்


OECD evaluation criteria, retrieved from
*https://tinyurl.com/2p9835a6*

OECD(2022). Understanding the six criteria: Definitions, elements for analysis and key challenges. retrieved from
*https://tinyurl.com/bddeffx8*



**வெளியீடு**

ASIA PACIFIC PARLIAMENTARIANS FORUM FOR EVALUATION

APEA Asia-Pacific Evaluation Association

Global Parliamentarians Forum for Evaluation



தொடர்புகளுக்கு: apea.coordinator@gmail.com



**தமிழாக்கத்திற்கான அனுசரணை**

SLEvA

Sri Lanka Evaluation Association



தொடர்புகளுக்கு: sleva.sec@gmail.com